திருக்கழுகுன்றம்-கருங்குழி சாலையில் அகத்தியர் தீர்த்த குளம் அமைந்துள்ளது. சுந்தர மூர்த்தி நாயனார், ஈசனை பூஜிக்க வந்தபோது இதில் நீராடி சுவாமி தரிசனம் பெற்றதாக ஐதீகம். இதனால், சித்திரை திருவிழாவின் நான்காம் நாள் உற்சவத்தில் சுவாமி, தீர்த்தத்தின் அருகில் உள்ள மண்டபத்தில் எழுந்தருள்வதாக கருதப்படுகிறது.

வேதகிரீஸ்வரர் கிரிவலப்பாதையில் உள்ள நவகிரக கோயிலுக்கு பின்புறம் வருண தீர்த்த குளம் அமைந்துள்ளது. இதில், வருண பகவான் நீராடி மலைக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்ததாக ஐதீகம். இதன் அருகில் கோடி விநாயகர் கோயில் உள்ளதால் கோடி விநாயகர் தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

காஞ்சிபுரம் வரதராஜர் கோயில் தேரோட்டத்தில் பங்கேற்ற பக்தர்கள். (உள்படம்) திருத்தேரில் எழுந்தருளிய வரதராஜர்.

வரதராஜ பெருமாள் கோயிலில் தேரோட்டம்

அமைச்சர்கள் வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்

காஞ்சிபுரம்

வரதராஜ பெருமாள் கோயில் பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேர் உற்சவம் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. அமைச்சர்கள் ரமேஷ், எஸ்.பி.கே.தென்னரசு, ஆர்.வி.ரஞ்சித்குமார் ஆகியோர் திருத்தேரின் வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர்.

காஞ்சிபுரம் வரதராஜர் கோயிலில் பிரம்மோற்சவ விழா கடந்த 28-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா தொடங்கிய 3-ம் நாளான கடந்த 30-ம் தேதி முக்கிய நிகழ்வான கருட சேவை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 7-ம் நாளான நேற்று தேரோட்டம் நடைபெற்றது. அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் எஸ்.பி.கே.தென்னரசு, வனத்துறை அமைச்சர் ஆர்.வி.ரஞ்சித்குமார் பங்கேற்று தேரின் வடம் பிடித்து தொடங்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து லட்சக்கணக்கான மக்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். அலங்கரிக்கப்பட்ட தேரில் வரதராஜ பெருமாள் ராஜவீதிகளில் வலம் வந்தார்.

இந்த தேரோட்டத்தையொட்டி 800-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். காஞ்சிபுரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 5 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

இந்த தேரோட்டத்துக்கான முன்னேற்பாடுகள், பாதுகாப்பு வசதிகள் குறித்து அமைச்சர் ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “பாழடைந்த நிலையில் உள்ள பழமையான கோயில்களை மீட்டெடுத்து மக்கள் தரிசனத்துக்கு வழிவகை செய்ய அரசு திட்டமிட்டு ஆய்வு செய்து வருகிறது” என்றார். இதில் ஆட்சியர் சினேகா, சார் ஆட்சியர் ஆஷிக் அலி, அறநிலையத் துறை இணை ஆணையர் சி. குமரதுரை, துணை ஆணையர் மா.ஜெயா, கோயிலின் உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அறங்காவலர் ராஜலட்சுமி பங்கேற்றனர்.

பூந்தமல்லி திருக்கச்சி நம்பிகள், வரதராஜப் பெருமாள், மீஞ்சூர் வரதராஜப் பெருமாள் கோயில்களில் நடைபெற்ற தேர் திருவிழாவில் திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

திருப்போரூர் அருகே ரூ.350 கோடி மதிப்பில்

புதிய நீர்த்தேக்க திட்டப்பணிகள்

அமைச்சர் என்.ஆனந்த் ஆய்வு

மாமல்லபுரம்

கிழக்கு கடற்கரை - பழைய மாமல்லபுரம் இடையே உள்ள பகுதியில், புதிதாக அமைக்கப்பட உள்ள நீர்த்தேக்கப் பணிகளை, அமைச்சர் ஆனந்த் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கோவளம் துணை வடிநில பகுதியில் நீர்வள ஆதாரத் துறை சார்பில், கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மாமல்லபுரம் சாலை ஆகியவற்றுக்கு இடையே திருப்போரூர் மற்றும் திருக்கழுகுன்றம் வட்டங்களில் உள்ள கோவளம், திருவிடந்தை, நெம்மேலி, பூஞ்சேரி, தையூர், மானாமதி, சிறுதாவூர், காலவாக்கம், பையனூர், உப்பளம் ஆகிய பல்வேறு கிராமப் பகுதிகளில் 5,127 ஏக்கர் பரப்பளவில் (17 கிமீ) புதிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட உள்ளது. இதற்காக, ரூ.350 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை, கடந்த ஜனவரி மாதம் முன்னாள் முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

இந்த நீர்த்தேக்கத்தில், 1.65 டிஎம்சி நீரை தேக்கி வைக்க முடியும். இதில், அதிகபட்சமாக 12 ஆயிரம் கனஅடி நீரை வெளியேற்ற முடியும். மேலும், ஆண்டுக்கு அப்பகுதியை சுற்றியுள்ள பகுதிகளின் 2.25 டிஎம்சி குடிநீர் தேவையை இந்த நீர்த்தேக்கம் பூர்த்தி செய்யும். நாள்தோறும் 170 மில்லியன் லிட்டர் குடிநீரை விநியோகிக்க முடியும். இத்திட்டத்துக்கு, தமிழக கடலோர மண்டல ஒழுங்கு முறை ஆணையம் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில், இந்த நீர்த்தேக்க பணிகளை நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, ஆட்சியர் வீரப்பன் மற்றும் நீர்வளத் துறை அதிகாரிகள், வரைபடம் மூலம் பணிகள் குறித்து அமைச்சருக்கு விளக்கமளித்தனர். இதில், நீர்வளத் துறை முதன்மை தலைமை பொறியாளர் கோபாலகிருஷ்ணன், கண்காணிப்பு பொறியாளர் செல்வகுமார், திருப்போரூர் எம்.எல்.ஏ.விஜயராஜ், நெம்மேலி ஊராட்சி தலைவர் ரமணி சீமான் உடனிருந்தனர்.

இருங்காட்டுக்கோட்டையில் ஏற்பட்ட தீவிபத்து தொடர்பாக அமைச்சர்கள் ச.கீர்த்தனா, எஸ்.பி.கே.தென்னரசு ஆய்வு செய்தனர். தாம்பரம் தொகுதியில் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும் என அமைச்சர் சரத்குமாரிடம் சமூக செயற்பாட்டாளர் தயானந்த் கிருஷ்ணன் தலைமையிலான சிட்லபாக்கம் ரைசிங் குழுவினர் கோரிக்கை மனு அளித்தனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

நான், B Abdul Rehman, த/பெ: Shaik Bashu, பிறந்த தேதி: 22.01.1976 (பிறந்த மாவட்டம்: சென்னை), எண்.1, அபிராமி அப்பார்ட்மெண்ட், நாகம்மாள் தெரு, வெற்றி நகர், சென்னை- 600 082 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி முதல் B SHAIK ABDUL MOHAMED REHMAN என்று அழைக்கப்படுகிறேன்.

I, Sangeetha Vijayasankar, D/O: Shanmugasundaram Venkataswamy , R/O: Plot No 18, Savannah Street, Kattankulathur, Potheri, Chengalpattu, Tamil Nadu-603203. Have Changed My Name To Sangeetha Shanmugasundaram

I, Shanmugasundaram , S/O: Venkataswamy , R/O: Plot No 18, Savannah STREET, Kattankulathur, Potheri, Chengalpattu, Tamil Nadu-603203. Have Changed My Name To Shanmugasundaram Venkataswamy.

I, Sridharan M, S/o. Murthi Gangadaran born on 18.07.1987, residing at L37/3, Thiruvalluvar Apartments, Kamarajar Road, near Ram temple, TNHB, Ayapakkam, Ayapakkam Po, Tiruvallur District, Tamilnadu-600077, have changed my name to Sridaran Murthi vide affidavit dated:01.06.2026

ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்

சட்ட மற்றும் ஆதரவுக் குழு, 2வது தளம், கதவு எண்.31, பழைய எண்.14, தெற்கு மாடத் தெரு, மயிலாப்பூர், சென்னை–600 004

விற்பனைக்கான பொது அறிவிப்பு / அசையும் சொத்துக்களின் ஏலம்
{சர்பேசிச் சட்டத்தின் கீழ் உடன் படிக்கக்கூடிய பிணையநலன் (அமலாக்க) விதிகளின் விதி 4 மற்றும் 5ன் நிபந்தனையுடன்}

கடன்தாரர் பெயர் : நவநீதன் அழகுவேல்

முகவரி : ஃப்ளாட் எண்.1107 மற்றும் 1117 – மனை 3/381, 11வது தளம், சீப்ரோஸ் புலிவார்டு, ராஜீவ் காந்தி ரோடு, தொரைப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு – 600 097.

அட்டவணை - பொருட்களின் விவரம் :

1. 1 – வீட்டு உபயோக இனங்கள் (உதாரணம்) 1 டி.வி, 1 கேஸ் அடுப்பு, 1 சோபா செட், 10 சீலிங் மற்றும் எக்ஸாஸ்ட் விசிறிகள், 1 கெய்சர், 4 மரக்கட்டில், 7 குளிரூட்டி, 2 அலங்கார மேசை, 1 – வாக்குவம் கிளீனர், 1 – குளிர்சாதனப்பெட்டி, 1 – ஓவன், 1 – டைனிங் டேபிள்.

ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகள் :

2. விற்பனைக்கு வரும் பொருட்கள், “எங்குள்ளதோ அங்கு”, “என்ன உள்ளதோ அது”, “உள்ளது உள்ளவாறு” மற்றும் “திரும்பப்பெற இயலாது” என்ற அடிப்படையில் விற்கப்படும். வங்கி இப்பொருட்களை வாங்குவதற்கு எவ்வித அனுமதியையும் வழங்கும் பொறுப்பினை ஏற்காது. ஏலதாரர் இப்பொருட்களை ஏல நாள் அன்றே ஏல நேரத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள அங்கீகாரம் பெற்ற அலுவலரின் அனுமதியுடன் பார்வையிட்டுக் கொள்ளலாம். திரு.R.கார்த்திக் – 90805 89635
3. தற்போதைய இவ்வறிவிப்பின் உடன் கடன்தாரர் ஏலம் உறுதியாவதற்குமுன் பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்ள சந்தர்ப்பமளிக்கப்படுகிறது. கடன்தாரர் 11.06.2026க்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.
4. வங்கி, அதிகமாக கேட்புத் தொகையை ஏற்கவோ, நிராகரிக்கவோ உரிமையுடையதாகும். மேலும் எந்த ஒரு / அனைத்து ஏலக்கேட்புகளையும் மற்றும் மின்–ஏலத்தையும் காரணம் ஏதும் காட்டாது தள்ளுபடி செய்யவோ / ரத்து செய்யவோ உரிமையுடையதாகும். ஒரு சமயம் அனைத்துக் கேட்புகளும் தள்ளுபடி செய்யப்பட்டால் ஏதேனும் ஒரு ஏலதாரர்கள் / ஏலம் கோருபவர்களுடன் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் மேற்கொண்டு எந்த ஒரு ஏலதாரர்களுக்கும் / ஏலம் கோருபவர்களுக்கும் விற்பனை செய்யவும் உரிமை உள்ளது. இதில் வங்கியின் முடிவே இறுதியானதும் கட்டுப்படுத்துவதுமாகும்.
5. வங்கி பொருட்களின் தரம் / விற்பனை நிலைகளை உறுதி செய்வதிலோ அல்லது பிற கட்டணங்கள், லீன், வில்லங்கங்கள் ஆகியவற்றுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
6. விற்பனை வங்கியின் உறுதி செய்தலுக்குட்பட்டது.
7. ஏலக்கேட்பு மாற்றத்தக்கதல்ல.
8. ஏலக்கேட்பு இந்த அறிவிப்பின் பிரசுரத்துக்கு 7 நாட்களுக்குள் அதாவது 11.06.2026 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

நரம்பியல் மற்றும் இதய சிகிச்சைகளை ஒரே நேரத்தில் செய்துகொண்ட மூதாட்டியுடன் எம்ஜிஎம் ஹெல்த்கேர் மலர் மருத்துவமனை டாக்டர்கள் குழு.

அரசியல், சமூக அமைப்புகள், நிறுவனங்கள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து (login) குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பேரில் விலைப்புள்ளி கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேனுவல் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வ. எண்.	ஒப்பந்தப்புள்ளி எண்.	திறந்த ஒப்பந்தப்புள்ளி குறிப்பு எண்.	பணியின் பெயர்	அளவு / அட்டவணை விளக்கம்		ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் & திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்
1.	202647 1212225 - OT14 - BCFLHB	ML/C/OT/14/பெட்க்ளீனிங் & ஃபர்னேஸ்/LHB/2026-27	ICF LHB பிரிவில் அமைந்துள்ள CNC பிளாஸ்மா வெட்டும் இயந்திரங்கள் (இன்வாய்ஸ் எண்: M19501 & M19587) இரண்டிற்குமான ஸ்லாக் (Slag) அகற்றுதல் மற்றும் வெட்டுப் படுக்கை (Cutting Bed) சுத்தம் செய்யும் பணிகள், மேலும் அழுத்தத் தணிப்பு உலை (Stress Relieving Furnace) இயக்கப் பணிகள்.	CNC பிளாஸ்மா வெட்டும் இயந்திரங்கள் (இன்வாய்ஸ் எண்கள் 19501 மற்றும் 19587) இரண்டிற்குமான ஸ்லாக் (உலோகக் கழிவு) அகற்றுதல் மற்றும் வெட்டுப் படுக்கை (Cutting Bed) சுத்தம் செய்யும் பணிகள்.	16 டைம்ஸ்	11.06.2026 15.00 மணி வரை
				போகி சட்டங்களுக்கான அழுத்தத் தணிப்பு உலை இயக்கப் பணிகள்.	400 கோச் செட்	

மேற்கண்ட விளம்பரத்தின் இந்தி மொழிவடிவம் https://icf.indianrailways.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

மூதாட்டிக்கு ஒரே நேரத்தில் பக்கவாதம், மாரடைப்பு

எம்ஜிஎம் ஹெல்த்கேர் மலர் மருத்துவமனையில் வெற்றிகரமான நவீன நுண்துளை சிகிச்சை

சென்னை

எம்ஜிஎம் ஹெல்த்கேர் மலர் மருத்துவமனையில், முழுமையான பக்கவாத சிகிச்சை பிரிவு 24 மணி நேரமும் செயல்படுகிறது. இம்மருத்துவமனைக்கு பக்கவாதம், மாரடைப்புக்கான ஆபத்துடன் அழைத்து வரப்பட்ட 68 வயது மூதாட்டிக்கு மருத்துவர்கள், நரம்பியல் மற்றும் இதய சிகிச்சைகளை ஒரே நேரத்தில் வெற்றிகரமான மேம்பட்ட நுண்துளை செயல்முறை மூலம் வழங்கி அவரது உயிரைக் காப்பாற்றியுள்ளனர்.

ஏற்கெனவே உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் பாதிப்பு இருந்த இந்த நோயாளிக்கு, மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாய்களில் கடுமையான அடைப்பின் காரணமாக பக்கவாத பாதிப்பு ஏற்பட்டது. மேலும் அவரது இதயத்துக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தையும் கடுமையாக பாதிக்கும் வகையில் கரோனரி தமனியிலும் பெரிய அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

முதுநிலை நரம்பியல் நிபுணர் டாக்டர் கார்த்திகேயன், முதுநிலை இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் மனோகர் ஆகியோர் தலைமையில் பல்வேறு சிறப்பு துறைகளின் மருத்துவர்கள் அடங்கிய குழு, முதலில் மூளையில் இருந்த அடைப்பைச் சரிசெய்ய மண்டை ஓட்டுக்குள் ஸ்டென்ட் பொருத்தும் சிகிச்சையை மேற்கொண்டது.

அதைத் தொடர்ந்து கழுத்துப் பகுதியில் இருந்த அடைப்பை அகற்ற ‘கரோடிட் ஆஞ்சியோபிளாஸ்டி’ சிகிச்சையும் அளிக்கப்பட்டது. அதன் பிறகு இதயத்துக்கு ரத்த ஓட்டத்தை சீராக்க ‘கரோனரி ஆஞ்சியோபிளாஸ்டி’ சிகிச்சையும் உடனடியாக செய்யப்பட்டது. வியப்பூட்டும் விதத்தில் இந்த 3 நுண்துளை சிகிச்சைகளுமே இந்நோயாளிக்கு உடலின் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் உணர்விழப்பை ஏற்படுத்தும் மயக்க மருந்து ஊசி மட்டுமே கொடுத்து செய்யப்பட்டன. புரட்சிகரமான இந்த நவீன நுண்துளை செயல்முறைகளின் காரணமாக விரைவாக குணமடைந்த இந்நோயாளி 4 நாட்களிலேயே சீரான உடல்நிலையுடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதுகுறித்து டாக்டர் கார்த்திகேயன் கூறுகையில், “இது அதிக சவாலான சிகிச்சையாக இருந்தது. ஏனெனில் நோயாளிக்கு ஒரே நேரத்தில் மூளை, இதயம் ஆகிய இரண்டையும் பாதிக்கும் கடுமையான ரத்தநாள அடைப்புகள் இருந்தன.

ஒரு சில உயர் மருத்துவமனைகளில் மட்டுமே இதுபோன்ற சிகிச்சை வழங்கப்படுகிறது. மற்றொரு சிறப்பு அம்சம் என்னவென்றால், உயிருக்கு ஆபத்தான இதயப் பிரச்சினைக்கான தீர்வையும் மூளைக்கான சிகிச்சையோடு ஒரே நேரத்தில் வெற்றிகரமாக நாங்கள் செய்தோம். முழு மயக்க மருந்தோ பெரிய அறுவை சிகிச்சையோ இல்லாமல், தழும்புகள் ஏதுமின்றி இந்த சிகிச்சைகள் செய்யப்பட்டதால் நோயாளி மிக விரைவாக குணமடைந்தார்” என்றார்.

தலைமை இயக்க அதிகாரி மற்றும் குழும துணைத் தலைவர் வேணுகோபால் பட் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

बैंक ऑफ़ बड़ौदा
பேங்க் ஆப் பரோடா

மண்டல ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
45, மூர் தெரு, JBAS கட்டிடம், 4வது தளம், சென்னை-600 001, இந்தியா
Ph: 044 -23454 384 / 385 Email: ARMMAS@bankofbaroda.com

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **“எங்கு உள்ளதோ அப்படியே” “எப்படி உள்ளதோ அப்படியே” “என்ன இருக்கிறதோ அதே நிலையில்” “வேறு எந்த தீர்வும் பொருந்தாது”** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: **கடன்தாரர் / ஜாமீன்தாரர் விவரங்கள்: 1) திரு.D.ராஜேஷ் (கடன்தாரர்/அடமானதாரர்) த/பெ. N. தசரதன்**; எண்.27, அம்மன் கோயில் தெரு, கோவில்பதாகை, திருமுல்லைவாயல் சாலை, சென்னை - 600 062. **மேலும் ஒரு முகவரி:** எண்.185, ZOOM Bar & Restaurant, நேதாஜி சாலை, மீரா காம்ப்ளக்ஸ், திருவள்ளூர், பின்கோடு - 602 001. **மற்றும் மேலும் ஒரு முகவரி:** எண்.1, நாவிதர் தெரு, கோவில்பதாகை, ஆவடி, சென்னை - 600062. **2) திருமதி. R. சிந்து (இணைகடன்தாரர்), க/பெ. D. இராஜேஷ்,** எண்.27, அம்மன் கோயில் தெரு, கோவில்பதாகை, திருமுல்லைவாயல் சாலை, சென்னை - 600 062. **மேலும் ஒரு முகவரி:** எண்.185, ZOOM Bar & Restaurant, நேதாஜி சாலை, மீரா காம்ப்ளக்ஸ், திருவள்ளூர், பின்கோடு - 602 001. **மற்றும் மேலும் ஒரு முகவரி:** எண்.1, நாவிதர் தெரு, கோவில்பதாகை, ஆவடி, சென்னை - 600062.

மொத்த நிலுவைத் தொகை: OA 487/2017 இல், 25.02.2021 தேதியிட்ட DRC 143/2021 இன் படி, சான்றிதழ் கடன்தாரர்களிடமிருந்து ரூ. 95,19,232.57 அதனுடன், 01.06.2026 முதல் கணக்கிடப்படும் எதிர்கால வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து ஏதேனும் மீட்புத் தொகை இருப்பின், அதனை கழித்த பிறகு சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டியுள்ளது. — **சுவாதீனம் நிலை : நேரடி சுவாதீனம்**

சொத்தின் விளக்கம்: கொடுங்கையூரில் அமைந்துள்ள குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடம்: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், கொடுங்கையூர் கிராமத்தின் சர்வே எண்.159 இல் அடங்கிய சென்னை - 600 118, கொடுங்கையூர், “விவேகானந்தா நகர்” என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு, சஞ்சய் காந்தி தெரு, மனை எண்.52 இன் பரப்பளவு 2400சதுர அடியில் பிரிக்கப்படாத அரை பங்கு (அதாவது 1200சதுர அடி) விஸ்தீரணங்கொண்ட நிலம், அதில் தரை தளம் முழுவதுமாக கட்டப்பட்டுள்ள 1000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, பின்வருமாறு எல்லைகள்: வடக்கில்: மனை எண்.42; தெற்கில்: 20அடி சாலை; கிழக்கில் : மனை எண்.51; மேற்கில் : மனை எண்.53; Latitude: **13.130702** Longitude: **80.256169** (**தோராயமாக**)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **95,40,000/-** **டேவணித் தொகை** ₹ **9,54,000/-** **ஏல உயர்வு தொகை** ₹ **1,00,000/-**

வ.எண்.2: **கடன்தாரர் / ஜாமீன்தாரர் விவரங்கள்: 1) திரு.A.கோபி (கடன்தாரர்கள்/அடமானதாரர்), த/பெ. N.அபரஞ்சி,** எண்.27, அம்மன் கோவில் தெரு, கோவில்பதாகை, திருமுல்லைவாயல் சாலை, சென்னை-600 062 மற்றும் **மேலும் ஒரு முகவரி:** எண்.28, முதல் பிரதான சாலை, முகப்பேர் கிழக்கு திட்டம், முகப்பேர் மேற்கு, சென்னை-600037. **2) திருமதி.B.பச்சையம்மாள் (இணை கடன்தாரர்), க/பெ. A. கோபி,** எண்.27, அம்மன் கோயில் தெரு, கோவில்பதாகை, திருமுல்லைவாயல் சாலை, சென்னை - 600062 மற்றும் **மேலும் ஒரு முகவரி:** எண்.28, முதல் பிரதான சாலை, முகப்பேர் கிழக்கு திட்டம், முகப்பேர் மேற்கு, சென்னை-600037

மொத்த நிலுவைத் தொகை: OA 508/2017 இல், 25.02.2021 தேதியிட்ட DRC 144/2021 இன் படி, சான்றிதழ் கடன்தாரர்களிடமிருந்து ரூ. 1,25,78,467.67 அதனுடன், 01.06.2026 முதல் கணக்கிடப்படும் எதிர்கால வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து ஏதேனும் மீட்புத் தொகை இருப்பின், அதனை கழித்த பிறகு சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டியுள்ளது. — **சுவாதீனம் நிலை : நேரடி சுவாதீனம்**

சொத்தின் விளக்கம்: கொடுங்கையூரில் அமைந்துள்ள குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடம்: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், கொடுங்கையூர் கிராமத்தின் சர்வே எண்.159 இல் அடங்கிய சென்னை - 600 118, கொடுங்கையூர், “விவேகானந்தா நகர்” என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு, சஞ்சய் காந்தி தெரு, மனை எண்.52 இன் பரப்பளவு 2400சதுர அடியில் பிரிக்கப்படாத அரை பங்கு (அதாவது 1200சதுர அடி) விஸ்தீரணங்கொண்ட நிலம், அதில் முதல் தளம் முழுவதுமாக கட்டப்பட்டுள்ள 1000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, பின்வருமாறு எல்லைகள்: வடக்கில்: மனை எண்.42; தெற்கில்: 20அடி சாலை; கிழக்கில் : மனை எண்.51; மேற்கில் : மனை எண்.53; Latitude: **13.130702** Longitude: **80.256169** (**தோராயமாக**)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **95,40,000/-** **டேவணித் தொகை** ₹ **9,54,000/-** **ஏல உயர்வு தொகை** ₹ **1,00,000/-**

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் : எதுவும் இல்லை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 03.07.2026, காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை

விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

மின் ஏல தேதி & நேரம்: 10.07.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஆன்லைன் விற்பனைக்கான **https://baanknet.com.** இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி:**044-23454384, 23454385** எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 02.06.2026, இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

Central Bank of India
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए "केंद्रित" "CENTRAL" TO YOU SINCE 1911

அரும்பாக்கம் கிளை
06, அமராவதி நகர் மெயின் ரோடு, அரும்பாக்கம்,
சென்னை - 600 106, Ph: 044-23464272
E-mail ID: bmchen4956@centralbank.bank.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து **“உள்ள இடத்தில் உள்ளவாறு”, “உள்ளது உள்ளவாறு” மற்றும் “எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே”** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mr.K.சீனிவாசன் மற்றும் Mrs.லலிதா சீனிவாசன், இருவரது வசிக்கும் முகவரி: எண்.14/19, பாரதி தெரு, அவ்வை நகர், சூளைமேடு, சென்னை-600094

கோரிக்கை அறிவிப்பு தேதி: 29.04.2022 / கடன் நிலுவைத்தொகை: 02.06.2026 அன்றுள்ளபடி ₹ **67,59,965.56** சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 19.12.2023**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.93/33 & 93/18, பட்டா எண்கள்.1259 & 1258, “OMS கிரீன் சிட்டி” என அழைக்கப்படும் லேஅவுட் (D.T.C.P. vide LP/DTCP No. 256/2019, தேதி 30.05.2019) **கிராம எண்.152, வட்டம்பாக்கம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் மனை எண்.5-ல் பரப்பு 1500 சதுர அடி, மனை எண்.7-ல் பரப்பு 1496 சதுர அடி மற்றும் மனை எண்.8-ல் பரப்பு 1500 சதுர அடி, மனை எண்கள். 5, 7 & 8 -ன் மொத்த பரப்பு 4496 சதுர அடி காலி வீட்டு மனை,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சொத்தானது Mr.சீனிவாசன் S/o.Mr.கருப்பையா பெயரிலுள்ளது. **மனை எண்.5-ன் பரப்பு 1500 சதுர அடி:** எல்லைகள்: வடக்கு: 30 அடி லேஅவுட் ரோடு, தெற்கு: மனை எண்.8, கிழக்கு: மனை எண்.4, மேற்கு: மனை எண்.6. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 30 அடி. **மனை எண்.7-ல் பரப்பு 1496 சதுர அடி:** எல்லைகள்: வடக்கு: மனை எண்.6, தெற்கு: 23 அடி லேஅவுட் ரோடு, கிழக்கு: மனை எண்.8, மேற்கு: காலி நிலம். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 47.6 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 28.3 அடி. **மனை எண்.8-ல் பரப்பு 1500 சதுர அடி:** எல்லைகள்: வடக்கு: மனை எண்.5, தெற்கு: 23 அடி லேஅவுட் ரோடு, கிழக்கு: மனை எண்.4, மேற்கு: மனை எண்.7. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 30 அடி.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **43,75,000/-** **டேவணித்தொகை** ₹ **4,37,500/-**
ஏல உயர்வு தொகை ₹ **20,000/-** **சுவாதீனம் வகை: நேரடியான (Physical)**
இ-ஏல தேதி/நேரம் 24.06.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 24.06.2026 மாலை 3.00 மணிக்குள்
சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 20.06.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: **https://baanknet.com** **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: **https://www.centralbankofindia.bank.in**

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **பிராந்திய அலுவலகம், மீட்பு, முதன்மை மேலாளர் Mob: 88097 17676, அரும்பாக்கம், கிளை மேலாளர், Mob: 89399 62701,** அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) & 9(1)-ன்கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 02.06.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).